1970 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பெரும் பகுதியை அவர்கள் தான் ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு பகுதியை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு முடிவிற்கிணங்க ஒரு பகுதியை மட்டும் மாநில அரசு ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் மைய சமயற்கூடம்

***265 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம் :** மான்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வட்டம், பெரியநாயக்கன் பாளையம் பகுதியில் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் மத்திய உணவு வழங்கு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

(இ) இத்திட்டத்தை விரைவுபடுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) &(இ) பெரியநாயக்கன் பாளையத்தில் மத்திய உணவு வழங்கு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் தற்போது இல்லை. எனினும் நிதிநிலை வசதிக்கேற்ப, 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் படிப்படியாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் மத்திய உணவு வழங்கு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் 'கேர்' உணவுத் திட்டத்தின்கீழ் மையச் சமையற்கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் முதன்முறையாக ஐந்தாறு வட்டங்களிலாவது அப்படிப்பட்ட மையச் சமையற்கூடங்கள் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முன்பே ஒரு கேள்விக்கு விடையளிக்கும்போது இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். 'கேர்' நிறுவனம் மாவட்டம் மாவட்டமாக எடுத்துக்கொள்கிற திட்டத்தைத்தான் வகுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு வரையில் அப்படி 31 கூடங்கள் கட்டி முடிக்கப்பெற்று 70 அக்டோபரிலிருந்து 71 செப்டம்பர் வரையில் 66 கூடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லும்போது அப்படிக் கட்டுவதற்கு ஏற்ற முறையில் சாமான்கள், போக்குவரத்து தன்மை ஆகியவற்றையெல்லாம் பார்க்கும்போது இப்போதுள்ள முறையில் சென்றால்தான் அதிகச் செலவு இல்லாத வகையில் முடியும் என்று அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஒன்றிரண்டு ஆண்டுக் காலத்திற்குள் 374 ஒன்றியங்களிலும் இத்திட்டத்தை நிறைவேற்றுகிற முறையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வசதிகள் அடிப்படையில் திட்டத்தை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. இன்னும் இரண்டொரு ஆண்டுக் காலத்தில் கோவை மாவட்டத்திற்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படலாம் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : இப்போது மாநில ரீதியில் செலவழிப்பதற்கு நிதிவசதி இல்லாவிட்டாலும் கோவாப்பரேட்டிவ் நிறுவனங்கள் இருக்கின்றன அவற்றில் 'மாமன் குட் பண்ட்ஸ்' இருக்கின்றன. நிதி உதவி அளிக்கத் தக்க வகையில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியங்களும் உள்ளன. பலதரப்பட்ட இன்ஸ்டிட்யூஷன்ஸ் இவற்றிற்கு உதவுவதற்கான நிலைகளும் இருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் பயன்படுத்தி இத்திட்டத்தை நிறைவேற்றக்கூடிய செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆங்காங்கு உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் இவற்றின் உதவி பெற்றும், பொது மக்கள் தருகிற நன்கொடையையும் சேர்த்து நடத்த வேண்டுமென்ற திட்ட அடிப்படையில்தான் நடைபெறுகிறது. அதற்கு அரசாங்கம் ஆறு காசு வீதம் தருகிறது. மொத்தம் பத்து காசில் நடைபெறமுடியாது. 'கேர்' நிறுவனம் தருகிற உணவுப் பொருள்களைக் கொண்டு ஓரளவு கட்டுபடியாகும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதனால் ஆசிரியர்களுக்கு சங்கடங்கள் ஏற்படுகின்றன, அவர்கள் சமையல் செய்வது, மேற்பார்வை இடுவது, எல்லா வற்றையும் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு இவற்றின் காரணமாக ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லை இந்த 'கேர்' நிறுவனம் செய்துவரும் உதவியால் இப்போது நீங்குகிறது. அவர்கள் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் மைய உணவுக் கூடங்களைக் கட்டித் தருகிறார்கள். தொடராச் செலவு ரூபாய் இரண்டு லட்சம். அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். தொடரும் செலவு ரூ. 17,000 ஒரு கூடத்திற்கு ஆகிறது. அதை இந்த அரசு ஏற்றுக்கொள் கிறது. அந்த அளவில் இப்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அவர்கள் அளிக்கும் உதவிகளால் நம் வசதிகள் கூடக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 266, 267, 268 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

மதுரையில் பின்நிலை வகுப்புக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி

***269 வின—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு பின்நிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை, ஷெனாய் நகரில் 1969 அக்டோபரில் பின்தங்கிய கல்லூரி மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் திறக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், இதுவரை அந்த ஹாஸ்டலில் தங்கி கல்லூரிக்குப் படிக்கச் செல்லும் மாணவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவரவர்களே, மதுரை ஷெனாய் நகரில் கடந்த அக்டோபரில் பின்தங்கிய மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் திறந் தார்கள். அதில் பின்தங்கிய மாணவர்களில் பலர் இதுவரை போதுமான அளவு ஹாஸ்டலில் தங்க விரும்பவில்லை என்று அறிகிறேன் காரணம், அங்கே இருக்கும் மாணவர்களுக்கு போதிய அளவு ஹாஸ்டலில் தங்குவதற்கான வசதி, சாப்பாடு பணம் தராத காரணத்தால் சேர விரும்பவில்லை. ஆகவே, இதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து பணத்தைக் கேட்டு வாங்கி பின்தங்கிய மாணவர்களுக்கு வேண்டிய வசதி செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : மதுரை ஷெனாய் நகரில் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு இதுவரை ஹாஸ்டல் திறக்கப்படவில்லை. அப்படி திறக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தை நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.